## முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு

| | | | | |
|---|---|---|---|---|
| வழக்கு எண் | OP | 254 | of | 2013 |

2028-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10-ம் நாளான இன்று

| | |
|---|---|
| வாதி/பிரதிவாதி<br>மனுதாரர்/எதிர்மனுதாரர் | தரப்பில் எ.ம.சா. 1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.பிரபாகரன் என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பழனிராஜ் | தந்தை பெயர் | |
| கிராமம் | | கணவர் பெயர் | |
| ஜாதி | | தாலுக்கா | |
| | | சமயம் | |
| தொழில் | | வயது | |

நாள்-10.04.2026

எ.ம.சா.-1

**முதல் விசாரணை-**

நான் எதிர்மனுதாரர். போக்குவரத்து கழகத்தில்ஓட்டுநராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். எனது தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன்.

**குறுக்கு விசாரணை-**

நான் ஓட்டுநராக பணி புரிந்தேன் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனக்கு அனுமதிக்கப்பட்ட நேரம் மாலை 5.30 மணியாகும். திருவண்ணாமலையில் இருந்து சென்னை சுமார் 320 கி.மீ இருக்கும். திருவண்ணாமலையில் இருந்து சென்னை வரும்போது நிறைய நிறுத்தங்கள் உள்ளது.

எனவே குறிப்பிட்ட நேரத்திலும், வேகத்திலும்தான் வர முடியும். விபத்து ஏற்பட்டால் உடனடியாக என்னுடைய மேல் அதிகாரிக்கு தெரிவிக்க வேண்டும். விபத்து ஏற்பட்டவுடன் நான் என் அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்தேன். நேர காப்பாளரிடமும், காவல் நிலையத்திலும் சொன்னேன். விபத்து ஏற்பட்டால் வாகனத்தை போக்குவரத்து கழகத்தின் ஷெட்டில் வைத்து ஆய்வு செய்வார். பேருந்தை காவல் நிலையம் மூலமாக மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்விற்கு அனுப்பி வைக்கவில்லை. பேருந்திற்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை. விபத்து ஏற்பட்ட இடம் பாக்கம் ரயில் நிலையம் அருகில். அங்கிருந்து கோயம்பேடு பேருந்துநிலையம் செல்ல சுமார் 2 மணி நேரம் ஆகும் என்றால் சரிதான். என்னுடைய கவனக்குறைவாலும் அஜாக்கிரதையாலும் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. மண் சாலையில் இடது புறமாக ஓரமாக நடந்து சென்றவர் மீது நான் அஜாக்கிரதையாக மோதி இறப்பை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. புகாரில் சென்டர் மீடியன் பற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல. இறந்து போன நபர் வலதுபுறம் இருந்து இடது புறமாக திடீரென ஓடிவந்ததால்தான் விபத்து நடந்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பேருந்தின் இடதுபுறம் முழுவதுமாக பிரேக் செய்து நிறுத்தியபோது அந்த நபர் பேருந்தின் முன் இடதுபுறம் இருந்து தலையில் பலத்த காயம் அடைந்தார் என்று சொல்வது முற்றிலும் பொய் என்றால் அதை மறுக்கிறேன். போக்குவரத்து கழக வழக்குகள் அனைத்திலும் இவ்வாறு பாதசாரி திடீரென சாலை கடந்ததாக கட்சி எடுப்பது சகஜம் என்றால் சரியல்ல. இறப்பை

ஏற்படுத்தியதற்கு முழு காரணம் நான்தான் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை என் மீதுதான் தாக்கல் செய்யப்பட்டது என்றால்சரியல்ல. இறந்துபோன நபர் மீது முதல் தகவல் அறிக்கை போடப்பட்டதாக சொல்வது முற்றிலும் பொய் என்றால் அதை மறுக்கிறேன்.

மறுவிசாரணை- இல்லை.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu